## யூலை- 03 - திங்கள்
### புனிதர் தோமயார் - திருத்தூதர்
### உங்களுக்கு அமைதி உரித்தாகுக! யோவா. 20:26

### முதல் வாசகம் : ஏபேசியர் 2 : 19 – 22

சகோதர சகோதரிகளே, எனவே இனி நீங்கள் அன்னியர் அல்ல் வேற்று நாட்டினரும் அல்ல. இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்.கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறது.நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**பதில்பாடல் :** உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம்
நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

### நற்செய்தி : யோவான் 20 : 24 – 29

அக்காலத்தில் பன்னிருவருள் ஒருவரான திதிம் என்னும் தோமா, இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை.மற்றச் சீடர்கள் அவரிடம், ”ஆண்டவரைக் கண்டோம்” என்றார்கள். தோமா அவர்களிடம், ”அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்” என்றார்.எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று வாழ்த்தினார்.பின்னர் அவர் தோமாவிடம், ”இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்” என்றார்.தோமா அவரைப் பார்த்து, ”நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!” என்றார்.இயேசு அவரிடம், ”நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்றார்.

**தியானம்:** அமைதியின் தெய்வமே இறைவா! என் இதயத் தலைவனே! அருள்வாய் அருள்வாய் நான் ஏங்கித் தேடுகின்ற அமைதி! என்று நம் ஒவ்வொருவடைய இதயமும் துடித்துக் கொண்டிருப்பதை நாம் உணர்வோம். பல சமயங்களில் அதை எங்கு தேடுவது? எப்படி அடைவது? என்று அறியாமல் அமைதி என்று நாம் எண்ணும் பல தற்காலிகத் தீர்வுகளில் சங்கமித்து விடுகின்றோம். அவற்றினால், பல விபரீதமான பின் விளைவுகளைத் தான் முடிவாகச் சந்திக்க முடிகின்றது. இறைமகன் இயேசு நம் ஒவ்வொருவருடைய இல்லங்களையும், உள்ளங்களையும் உற்று நோக்கியவாறு நம் இல்லக் கதவுகளிலும், இதய வாசல்களிலும் காத்திருக்கின்றார். நாம் ஏங்கித் தேடுகின்ற அதே அமைதியை நமக்கு ஒரு வார்த்தையில் அள்ளித்தர ஆவலாயிருக்கின்றார். ஆனால், அந்த அமைதியின் தெய்வத்தை தான் சந்தித்தே தீரவேண்டும், அவருடன் உறவாட வேண்டும், அவரை தொட்டு உணரவேண்டும் என்ற தோமாவின் வைராக்கியத்தை நம்மில் எத்தனை பேர் கொண்டிருக்கின்றோம்? ஆண்டவரைக் காணாமல் அவரை நம்பமாட்டேன் என்ற குறை அவரிடமிருந்தும்: அவரைக் காண வேண்டும் என்ற தோமாவின் அங்கலாய்ப்பு, பூட்டப்பட்டிருந்த கதவுகளைத் தாண்டி ஆண்டவரை வரவழைத்தது. அமைதியையும் அள்ளி வழங்கியது. “என் ஆண்டவரே: என் தேவனே” என அறிக்கையிட வைத்தது.

நாம் அனைவரும் கடவுளின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தக் கடவுள் அருளுகின்ற அமைதியும், சமாதானமும் நமக்கு இன்றியமையாதவை. இறைவனைத் தேடுவோம் அமைதியைச் சுவைப்போம். .